www.Padasalai.Net www.CBSEtips.in

V7T

விருதுநகர் மாவட்டம்

முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

வகுப்பு 7

நேரம் : 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **8×1=8**

1) 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ................
அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2) 'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................
அ) இரண்டு+டல்ல ஆ) இரண்+அல்ல இ) இரண்டு+இல்ல ஈ) இரண்டு+அல்ல

3) பேச்சுமொழியை ................ வழக்கு என்றும் கூறுவர்
அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி

4) குற்றியலுகரத்தின் வகைகள் ................
அ) நான்கு ஆ) மூன்று இ) ஆறு ஈ) இரண்டு

5) வாழை, கன்றை ................
அ) ஈன்றது ஆ) வழங்கியது ஈ) கொடுத்தது ஈ) தந்தது

6) 'சுட்டபழங்கள்' என்று குறிப்பிடப்படுபவை ................
அ) மண் ஒட்டிய பழங்கள் ஆ) சூடான பழங்கள்
இ) வேகவைத்த பழங்கள் ஈ) சுடப்பட்ட பழங்கள்

7) தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ................
அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை இ) முண்டந்துறை ஈ) கூந்தன்குளம்

8) 'நேரம்+ஆகி' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது
அ) நேரமாகி ஆ) நேராகி இ) நேரம்ஆகி ஈ) நேர்ஆகி

**II. குறுவினா: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)** **3×2=6**

9) தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
10) பேச்சுமொழி என்றால் என்ன?
11) 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.
12) காட்டுப் பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?
13) மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.

**III. சிறுவினா: (எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்)** **1×3=3**

14) பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை எழுதுக.
15) நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

**IV. மனப்பாடப் பகுதி (அடிபிறழாமல் எழுதுக)** **1×4=4**

16) 'அருள்நெறி' எனத் தொடங்கி 'அன்பறமே' என முடியும் 'எங்கள் தமிழ்' பாடலை எழுதுக.

**V. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளி:** **3×2=6**

**17) பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக:**
அ) பசு, விடு, ஆறு, கரு ----- ஆ) அரசு, எய்து, மூழ்கு, மார்பு -----

**18) தொகைச் சொற்களை விரித்து எழுதுக:**
அ) முக்கனி ஆ) முத்தமிழ்

**19) இருபொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக:**
அ) மழலைபேசும் ----- அழகு ஆ) இனிமைத் தமிழ் ----- எமது

**20) கலைச் சொல் தருக:** அ) Media ஆ) Magazine

**VI. கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக:** **1×3=3**

வயல், முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி,
கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com